ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2409/39 - 2024 නොවැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.11.07

2409/39 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/IMA/LAN/05/02/31.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2020/WS/244.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் இமதூவ பிரதேச செயலாளர் பிரிவில் இமதூவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரித்துள்ள நில அளவைப்பட இல. 810343 மற்றும் 2024.08.15 ஆந் திகதியிட்ட வரைபடத்தில் துண்டு இல. 01 மற்றும் 02 ஆகக் காட்டப்படுகின்ற மொத்த அளவில் 0.8545 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் குறிப்பிட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 1 - காணியின் பெயர் : தாச்சகனத்த ஹேன, மஹஹேன்கனத்த மற்றும் எக்வத்தேகனத்த; உரிமை கோருபவர் : திரு. லங்கா சோமதேவ மெண்டிஸ் வலவகே; விஸ்தீரணம் : 0.7457 ஹெக்டயார்**

வடக்கு : அ.வ. 1728 இல் துண்டு இல. W 104 (உ.வ. 192899), 3148 (உ.வ. 192900) மற்றும் 3149 (உ.வ. 192901); கிழக்கு : அ.வ. 1728 இல் துண்டு இல. 3148 (உ.வ. 192900) மற்றும் 3149 (உ.வ. 192901); தெற்கு : அ.வ. 1728 இல் துண்டு இல. 3149 (உ.வ. 192901), 3148 (உ.வ. 192900) மற்றும் இப் பத்திரத்தில் துண்டு இல. 2; மேற்கு : துண்டு இல. 2 மற்றும் அ.வ. 1728 இல் துண்டு இல. W 104 (உ.வ. 192899) மற்றும் அரசு உரிமை கோரும் கீகனகே கனத்த.

**02. துண்டு இல. 2 - காணியின் பெயர் : கீகனகே கனத்த; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.1088 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 1; கிழக்கு : துண்டு இல. 1, அ.வ. 1728 இல் துண்டு இல. 3148 (உ.வ. 192900) மற்றும் அரசு உரிமை கோரும் கீகனகே கனத்த; தெற்கு : வீதி மற்றும் அரசு உரிமை கோரும் கீகனகே கனத்த; மேற்கு : வீதி மற்றும் அரசு உரிமை கோரும் கீகனகே கனத்த.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இமதூவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.ஏ.எம். நஸ்லி,
பிரதேச செயலாளர்,
இமதூவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இமதூவ,
2024, நவெம்பர் 04.

EOG 11 - 0052

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.